இணையும் துணையும்
(கடக ஸ்ருதியும் பகவானே உபாயமும்)

Linking Means
(Kadaka sruthi and Bhgavan as the ultimate means)

விசிஷ்டாத்வைத கருத்துக்கள்
(Principles of Vishishtadvaita)

அடியேன் ராமானுஜதாஸன்
ஸார்வபௌமம் அய்யம்பேட்டை
ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்

CONTENTS

1. ஸ்ரீவைஷ்ணவம் (Srivaishanvam)
2. ப்ரம்ம சூத்ர பாஷ்யங்கள் (Bramma Sutra Bashyams)
3. விசிஷ்டாத்வைதம் (Visishtadvatiam)
4. ஜகத் காரணகன் (Jagad kAraNakan)
5. மறுக்க முடியாத பரதத்வம் (Supremacy of Srimun Narayana)
6. உபாயம் (Means)
7. பலன் (Ends)
8. ரஹஸ்யங்கள் (Three Rahasyas)

ஸ்ரீமாந் வேங்கட நாத$_2$ார்ய: கவிதார்கிககேஸரீ
வேத$_3$ாந்தாசார்யவர்யோமே ஸந்நித்த$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$

ஜ்ஞாநா நந்த$_3$ மயம் தே$_3$வம் நிர்மல ஸ்ப$_2$டிகா க்ருதிம் |
ஆத$_4$ாரம் ஸர்வ வித்$_3$யாநாம் ஹயக்$_3$ரீவம் உபாஸ்மஹே ||

கு$_3$ருப்$_4$ய: தத்$_3$ கு$_3$ருப்$_4$யஶ்ச நமோவாகம் அதீ$_4$மஹே |
வருணீமஹே ச தத்ர ஆத்$_3$யௌள த$_3$ம்பதீ ஜகதாம் பதீ ||

உல்லாஸ பல்லவித பாலிக ஸப்த லோகீ
நிர்வார கோரகித நேம கடாக்ஷ லீலாம் |
ஸ்ரீரங்க$_3$ ஹர்ம்யதல மங்க$_3$ள தீ$_3$ப ரேக$_2$ாம்
ஸ்ரீரங்க$_3$ராஜ மஹிஷீம் ஶ்ரியாமாஶ்ரயாம: ||

ப்ராய: ப்ரபத$_3$நே பும்ஸாம் பௌந:புந்யம் நிவாரயந்
ஹஸ்த: ஸ்ரீரங்க$_3$ ப$_4$ர்துர் மாம் அவ்யாத்$_3$ அப$_4$ய முத்$_3$ரித: ||

ஸ்ரீபாஷ்ய மங்களம்

அகி$_2$ல பு$_4$வந ஜந்ம ஸ்தேம ப$_4$ங்க$_3$ாதி லீலே
விநத விவித$_4$ பூ$_4$த வ்ராத ரக்ஷிக தீ$_3$க்ஷே |
ஶ்ருதி ஶிரஸி விதீ$_3$ப்தே ப்$_3$ரஹ்மணீ ஸ்ரீநிவாஸே
ப$_4$வது மம பரஸ்மிந் ஸேமுஷீ ப$_4$க்தி ரூபா ||

எம்பெருமானார் தனியன்

அடை அவனை அவாக் கொண்டு உள்ளுயிரும் உலகும் உடலாய்
உடையவனை* சடையனை, அயனையும் படைத்த இடையனை
மடை திறந்து மாதவன் அருளால் மருள் நீங்கி மறைப்பொருள் விடையினை
கொடையென குவித்த ராமாநுஜா! அடைந்தேன் உன்னடி யான் பெற்ற பேறே

1. வைஷ்ணவம்
VaishNavam

1.1. **விஷ்ணுவை தியானிப்பவன்** *வைஷ்ணவன்*.

The one who prays to Lord Vishnu is Vaishnavan.

1.2. *நாராயணாய வித்$_3$மஹே வாஸு$_4$தே$_4$வாய தீ$_4$மஹி*
தந்நோ விஷ்ணு: ப்ரசோத$_3$யாத்
பஞ்ச சுக்தம்
மூன்று திருநாமங்களிலும், விஷ்ணுவின் வியாபகத்துவத்தைக் காட்டவே தரிசனத்தை வைஷ்ணவம் என்றது.

Though three names referred in Pursha suktham, the religion is called Vaishanavam after the Lord's name Vishnu. It indicates that the Lord pervades everywhere.

1.3. **விஷ்ணு** *ஸர்வ வியாபி*. **அவன் இல்லாத இடமே இல்லை.**
திட விசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை
படர் பொருள் முழுவதுமாய் அவை அவைதொறும்
உடல் மிசை உயிர் என ***கரந்து எங்கும் பரந்துளன்***
சுடர் மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே
திருவாய்மொழி 1-1-7

Lord Vishnu pervades everyhwere. There is no place you one can imagine that he is not present in all of the universes

1.4. *ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸி ஸர்வ*:
பகவத் கீதை 11-40
அர்ச்சுனன் சொல்கிறான் "கிருஷ்ணா நீ எங்கும் வியாபித்திருப்பதால் நீயே எல்லாம் ஆகிறாய்".

இங்கு கிருஷ்ணன் எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாய் இருக்கிறான். பகவானுன் உலகமும் ஐக்யம் என்பதில்லை.விஷ்ணு ஸம்பந்தம் இல்லாத பொருளே இல்லை எனினும், அவனை பரபிரம்மமாக அறிந்து ஆராதிப்பவனே வைஷ்ணவன். மற்றவை எல்லாம் கங்கையில் அறியாமல் கிடக்கும் கட்டை, மீன் போல.

Arjuna in Bhgavad Gita tells to Lord Kirishna " You prevade everywhere and that's why you become everything".

Here it is stated that Bhgavan dwellss inside everything. Bhgavan and the world is not united.Though there is no material exist which does not have a connection to Vishnu, the one who understands Him as the Final Lord (as Brammam) is the Vishnavan. Others are like the dirt and fish that live in the river Ganges.

1.5. *அகல இல்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா* என்று விஷ்ணுவின் திருமார்பிலே பிராட்டி என்றும் *நித்யவாஸம்*. அவள்தான் *புருஷகாரகபூதை*. *அதால்* வைஷ்ணவன் *ஸ்ரீவைஷ்ணவன்*.

MahaLakshmi is always resides on the chest of Lord Vishnu. Because of here recommendation only, all the sinners like us get pardoned by the Lord. Because of Her, vaishnavan now is called Srivaishnavan.

1.6. *ஸ்ரீ*வைஷ்ணவன் என்பவன் பிறர் துக்கத்தை சகியாது, தனதாக பாவித்து, பிரதி பலன் நோக்காது, உகந்து அதை களைய முயலுவது. இது குலம், கோத்ரம், ஜாதி, நிறமில்லை.

A true Vishvanan is the who considers the suffering of others as his and tries to remove them without anything in return. This has nothing to do with caste, dynasty, lineage or color.

1.7. *அறியக் கற்று வல்லார் வைட்டணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே*
நம்மாழ்வார், திருவாய்மொழி 5-5-11
யார் வைஷ்ணவன் என்றால் எம்பெருமானின் ஸௌஸீல்ய, ஸௌலப்யாதி குணங்களை பரமபதத்திலும், பூலோகத்திலும் அறிந்து மகிழ்பவன்.

Swami Nammazhvar says in his Thiruvoimozhi that a Vaishnavan is the one who understands Bhgavan's highest from humbleeness and accessiblity and enjoys that.

1.8. *சந்தங்கள் ஆயிரமும் அறியக் கற்று வல்லாரானால் வைஷ்ணத்வ ஸித்தி*

ஆசார்ய ஹ்ருதயம் 37"

ஆசாரிய உபதேசங்களால் அருளிச் செயலை அத்யநம் பண்ணி, உபதேசம் கொண்டு, அர்த்தமும் தெளிவாய் ஏற்பட்டு, அர்த்தஞானம் ஏர்பட்டதற்கு ஏற்ப அனுஷ்டானம் கொண்டவராகவும் இருப்பவர்களைத்தான் வைஷ்ணவர்கள் என்று இலக்கணமாய் வரையறுக்கும்" என்று மணவாள மாமுனிகளின் வியாக்கியானம்.

Manavaala Mamunigal in his explanation for Acharya Hiruthyam says that a vaishanvan is the one who learns Azhvar's prabhandams in a rigourous manner from an Acharyan, understands the esoteric meanings, with that gaisn the knowlesge and behave accordingly.

1.9. *ப்ரபுரஹம் அந்ய குணாம் ந: வைஷ்ணவாநாம்*

பராசர மஹரிஷி, விஷ்ணு புராணம்

மறந்தும் புறந்தொழான் வைஷ்ணவன். மற்றைய குணங்களின் ஏற்ற தாழ்வு இருப்பினும், மாசிலா கற்பிலே ஒன்றியிருக்கும் கற்புக் கரசிகள் போலே வைஷ்ணவர்கள்.

Parasara Maharishi says in his Sri Vishnu Puraanam that a vaishnavan is the one who doesn't even care to look at other demi Gods.

1.10.

1.11.

1. ப்ரம்ம சூத்ர பாஷ்யங்கள்
Explantory Treatise of Bramma Sutram

2.1 அந்த விஷ்ணுவை அறிவது எப்படி? *ப்ரமாணங்கள் ப்ரத்யக்ஷம், அனுமானம், ஸப்தம்* என மூன்றாயினும் அதிலும் ஸப்தமே உயர்ந்த வேதாந்த ப்ரமாணம்.

The means to understand the Lord Vishnu as the ends can be classified as direct perception, inferenece and verbal testimony. Among the three, vedic testimony is the best, unanimously.

2.2 *ஏஷாது தோஷ ரஹித மஹிதா புராணி*
என்கிறபடி எந்த விதமான குறை, குற்றங்களும் இல்லாத உயர்ந்த ப்ரமாணம் வேதங்கள். அதன் பிறகு ஸ்மிருதி, இதிஹாச, புராணங்கள்.

Vedas not written by any person. They are anonymous. Because of that thet don't have any shortcoming or flaws usually associated with the limited knowledge of the author. After vedas, smruthis, ithihasa and puranaas are the best means to understand the Bhagavan.

2.3 *நியாயம், வைசேஷிகம், ஸாங்க்யம், யோகம், மீமாம்ஸம், வேதாந்தம்*. இவை வேதத்தை விளக்க தோன்றியவை. அதிலும் வேதாந்தம் ஒன்றே பரபிரம்மம், ஜகத் காரணகன் *ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே* என்பதை நிரூபித்தது. மீமாம்ஸமும் பல இடங்களில் இதைச் சொன்னதால் மீமாம்ஸமும், வேதாந்தமும் சேர்ந்து பூர்வ, உத்தர மீமாம்ஸா என்றது.

Among the six that explain the vedas - Nyayam, Vaiseshikam, saankyam, yogam, meemaamsam, vedantham - vedantha is the only one proves that Srimun Naraayana is the only one who is the prapabrammam, the cause for the all the creation. Meemaamsa also claims this in many places and so both

meemaamsa and vedantha were put together. They are called poorva meemaamsa (earlier part) and uttara meemaamsa (latter part). Meemaamsa means enquiry, investigation, examination.

2.4 *பூர்வ மீமாம்ஸா* என்பது *ஜைமினி* இயற்றிய கர்ம ஆராதனை சேர்ந்த 12 அத்யாயமும், *காசக்ருஸ்தரால்* இதர தேவதைகள் பற்றி எழுதிய 4 அத்யாயமும். *உத்தர மீமாம்ஸா* என்பது அந்த கர்ம ஆராதனைகளுக்கும், தேவதைகளின் அந்தராத்மாவான பிரம்மத்தைப் பற்றி *வியாஸ பகவான்* இயற்றிய 4 அத்யாயம். இதுவே *பிரம்ம சூத்திரம்*.

Poorva Meemaamsa consists of 12 chapters written by Jaimini to explain the rituals and 4 chapters written by Kazakrusthar that explains other devathas. Uttara meemaamsa is 4 chapters written by Vyasa Bhgavan and is called Bramma Sutram. This concludes that all rituals finally goes to the Brammam whop is the inner dweller in all the living things.

2.5 பிரம்ம சூத்திர பாஷ்யமே சங்கர பாஷ்யம், *ஸ்ரீ*பாஷ்யம், மத்வ பாஷ்யம். இது அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத ஸித்தாந்தம்.

The treatise that explains the Bramma Sutra mis called as Sankara Bhasyam, Sri Bashyam and Madhva Bashyam. They are based on Advaita, Vishishtadvaita, and dvaita.

2.6 அபேத ஸ்ருதிகள்

ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம - எல்லாம் ப்ரம்மமே (Brammam is everything)
தத் த்வம் அஸி - அது நீ ஆக ஆகிறாய் (That you are)
அஹம் ப்ரஹ்மாஸ்மி - நான்தான் ப்ரம்மம் (I am the God)
ஏகமேவாத் அத்விதீயம் - இரண்டின்றி ப்ரம்மம் ஒன்று (Brammam is nondual and one)

2.7 சங்கரரின் அத்வைதம் (மாயாவாதம்)

- உலகம் பொய் (*மாயை, ப்ரகிருதி*). *நிர்குண ப்ரம்மமே* மெய்.
- *அவித்யை* பொய்யான உலகும், ஜீவன்களையும் காட்டுகிறது. இருட்டில் கயிறு பாம்பாக தெரிவது போலே.
- ஸகுண ப்ரம்மான *நாராயணன்*, இந்த பொய் உலகத்தின காரணகன். அவனுடைய பரமபதமே *ஸகுண மோஷம்*.
- ஆசார்யனால் ஜீவன் முக்தி அடைந்து தானே ப்ரம்மம் என உணர்ந்து *ப்ரம்மாகிறான்*. அது ஸகுண ப்ரம்மத்திற்கு மேல் நிர்க்குண ப்ரம்மம். ஸத், சித், ஆனந்தமானது.
- நாராயணனை மோஷத்தில் அடைந்தவர் தாம் ப்ரம்மம் என அறியும்போது நாரயணனோடு சேர்ந்தே நிர்க்குண ப்ரம்மாகிறர்.
- மாயை ப்ரம்மத்தோடு இருந்தாலும் அது ப்ரம்மத்தை பாதிக்காது. பாம்பு வாயில் விஷம் போலே.
- வேதங்களில் *பேத வாக்யங்கள்* மாயையை காட்டும். அவை *அமுக்யம்*.
- *அபேதங்கள்* ஜீவன்கள் உண்மையில் ப்ரம்மமே என்பதால் அவை *முக்யம்*.

Sankara's philosophy based on advaita (Nondualisim)

- World is illusion. Brammam without any character is the real one.
- Ignorance creates the illusion of world and jeevas.
- Narayanan is the brammam with characters. He is responsible for illusionary wolrd. His moksham is full of enjoyment.
- Jeevas with the help of Acharyas realize they are the brammam. That is called jeeva mukthi.
- Those who went to Narayanan;s moksham, when they realize they are the brammam, they merge with him as characterless brammam.
- Vedas in many instances show bhedam (differentiation). They are unimportant since it talks about illusion.
- When veda talks about abheda (unity), it claims jeevas are the real brammam and that's why they are important.

2.8 பேத ஸ்ருதிகள்

த்வா ஸுபர்ணௌ - பொன்னிறமான இரண்டு

2.9 ஆனந்த தீர்த்தர் எனும் மத்வாசாரியரின் த்வைத கருத்து

- ப்ரம்மமும் உலகும் *வேறு*. இது வேதத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டது.
- நாராயணன் ஜகத் காரணகன். இது ப்ரத்யக்ஷம் ஆகாது. எனினும் *உண்மை*.
- கர்மாவிலிருந்து விடுபட்டு விஷ்ணுவின் பரமபதத்தை அடைவதே *மோஷம்*. அங்கும் *ஜீவ ப்ரஹ்ம பேதமே*.
- அபேத வாக்யங்கள் சில. பேத வாக்யங்கள் பல. அதனால் *அபேதங்கள் அமுக்யம்*.
- நாராயணன் ஒருவனே ஸ்வதந்த்ரன். எல்லாம் அவன் வசம் என்பது *அமுக்யமான பொருள்*.
- பேதம் என்பது ப்ரம்ம-அசேதன, ப்ரம்ம-சேதன, சேதன-அசேதன, சேதன-சேதன, அசேதன-அசேதன, எல்லாம் உண்மை.
- ப்ரம்மமும் உலகும் ஒன்று என்பது கணவனும் மனைவியும் ஒன்று என்பது போல.

Madhvacharya's doctrine is called dvaita (dualism)

- Brammam is different from universe. This has been told in vedas in many places.
- Narayanan Is the creator of the world. Though this can't be perceived directly, it is true.
- Getting out of the bondage, a chetana reaches Vishnu's abode is called moksham. There also, chetana is different from brammam.
- Vedas has a few nondual statements, but many dual statements. Majority wins.
- Narayanan is the only one independent. He owns everything else are less important statements.
- Differentiation exists in all stages. Brammam-achetana, Brammam-Chetana, Chetana-achetana, chetana-chetna, achetana-achetana. All these are real.

- When vedas say brammam and the univesrse is the same, that is similar to saying husband and wife are the same.

2.10 ராமாநுஜர் பரப்பிய விசிஷ்டாத்வைத கருத்து

- வேதங்களில் எல்லா வாக்யங்களும் முக்யமே. மேல் எழுந்த முரண்பாடைத் தவிர்த்து, சரியான பொருள் கூறுவது அவசியம்.
- ப்ரம்மமும், சேதன அசேதனங்களைக் கொண்ட உலமும் வேறு என்றது பேதம். ஒன்று என்றது அபேதம். இரண்டும் உண்மையே.
- சேதனாசேதனங்கள் அந்தர்யாமியான ப்ரம்மத்திற்கு உடலாய் இணைந்து உள்ளன என்பது கடக ஸ்ருதி (இணைக்கும் வாக்யங்கள்).
- ப்ரளய காலத்தில் ஸூக்ஷ்மமாய் தன்னுள் சேதானசேதனங்களை அடக்கி உள்ள காரணமான நாராயணனே ஸ்ருஷ்யில் ஸ்தூலமான உலகை படைக்கிறான். அது காரியம்.
- காரணமான பகவானையும், காரியமான உலகையும் ஒன்றாய் கூறுவதும் முக்யமே.
- இந்த ப்ரம்மம் உபய லிங்கம். நிர்க்குணம் என்பது இதற்கு ஹேயமான, தாழ்ந்த குணங்கள் இல்லை என்பது.

Bhagavad Ramanuja resestablished Visishtadvita philosophy

- All the sentences in vedas are equally imporatant. One needs to resolve the apprent conflicts on the vedas and interpet their true meaning.
- Bheada sruthis told brammam and the world are different. Abhead sruthis told they are one and the same. In fact, both are correct.
- All the sentient and nonsetient things form as a body for the inner dwelling Bhgavan. This is called kadaka sruthi or linking phiolosophy.
- During dissolution, Bhgavan keeps everything within Himself and that's how he is the cause for everything. During creation he manifests the world from him and thus He is the effect.

- Thus vedas in many instances refer the cause which is Bhagavan and the effect which is the world as one.
- This brammam has two identifcations. It Is full of supreme characters and void of foul characerts.
-

3 - விசிஷ்டாத்வைதம்
VisishtAdvaitam

3.1 *அசேஷ சித சித் ப்ரகாரம் ப்ரஹ்ம ஏகமேவ தத்வம்*
- ஸ்வாமி தேசிகன், தத்வ முக்தா கலாபம்

சேதனா சேதனங்களுடன் கூடிய (விசிஷ்ட) ப்ரஹ்மம் ஒன்றே என்பது விசிஷ்டாத்வைதம்

The brammam which is in inseparable ensemble with sentient and non sentient entities is the only one and no other reality exist. Nondualisim with a qualified whole in which brammam alone exist.

3.2 **பகவான்** *விசேஷ்யம்*
சித், அசித் என்பவை *விசேஷணம்*.
இந்த விசேஷ்யமும் விசேஷணமும் சேர்ந்ததுதான் *விசிஷ்டம்*.
அது *பிரிக்க முடியாத உறவு*.
வெண்மையான பால், மணமுள்ள பூ என்பது போலே.
இது ப்ருதக் ஸித்தி விசேஷணம்.

Bhgavan viseshyam. Chetana, achetans are viseshaNam. This attribute and substance cominations is called visishtam. This relation is inseparable like whiteness can't separated from milk or the smell can't be separated from the flower.

3.3 *ய ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிக$_4$த்ஸோ அபிபாபஸ் ஸத்ய காம: ஸத்ய ஸங்கல்ப*
சாந்தோக்ய உபனிஷத் 8-7-1

அந்த ப்ரம்மத்திற்கு பாவம் இல்லை. மூப்பு, மரணம், துன்பம், பசி, தாகம் இல்லை. அதன் விருப்பம் வீணாகாது. அதன் ஸங்கல்பம் ஸத்யமானது. அப்படி இருக்க அது நிர்க்குண ப்ரம்மம் இல்லை.

That brammam is not associated with any sins. It does not have old age, death, sufferings, hunger, thirst. His wishes never goes

in vain. His thinking is always fair. When vedas sau like this, this brammam can't be characterless brammam.

3.4 *யஸ்ய ஸர்வாணி பூதாநி சரீரம், யஸ்ய ப்ருத்வீ சரீரம்.*
ப்ருஹதாரண்ய உபனிஷத்

எந்த பரமாத்மாவிற்கு அனைத்து ஜீவன்களும் சரீரமோ, எவனுக்கு உலகம், பூமி எல்லாம் சரீரமோ..

To which Bhgavan all the living things are the body, for whom all the things on the universe form as a body..

3.5 *உடல் மிசை உயிர் என* ***கரந்து எங்கும் பரந்துளன்***
திருவாய்மொழி 1-1-7

நம்முடைய உடலுக்குள் இருக்கும் ஆத்மா போலே, பகவான் எல்லா சேதனா சேதங்னகளையும் உடலாய் கொண்ட ஆத்மா. அவன் சரீரி. மற்றவை எல்லாம் சரீரம். இது சாரீரக சாஸ்திரம்.

Just like our soul rside inside our body, Bhagavan is the super soul which resides in every matter we see in the universe.

3.6 *துலை ஒன்று இலை என நின்ற துழாய் முடியான் உடம்பாய்*
விலையின்றி நாம் அடியோம் வேதியர் மெய்பொருளே
அதிகார ஸங்கிரஹம் - 10

துளஸி மாலையை அணிந்த எம்பெருமானுக்கு சரீரமாய் நாம் உள்ளோம்.

We are all like the body for the Bhgavan Narayanan who wears thulasi garland.

3.7 *ஸ ப்3ரஹ்மா ஸ ஶிவஸ்ஸேந்த்3ரஸ்ஸோSக்ஷர: பரமஸ்ஸ்வராட் ||*
நாராயண ஸூக்தம்

அவனே பிரம்மா, அவனே சிவன், அவனே இந்திரன் என்றால் அவர்களுக்குள் ஐக்கியம் இல்லை. நாரயணனே ப்ரஹ்மாவின் அந்தராத்மா.

அவனே அவனும் அவனும் அவனும் அவனே
திருவாய்மொழி

He is the Bramma, He is the Siva, He is the Indra. This doesn't means all are same. Instead, it says Srimun Narayana is inner dweller among everything else.

3.8 *'கடல் ஞாலம் செய்தேனும் யானே' என்னும்*
'கடல் ஞாலம் ஆவேனும் யானே' என்னும்
-திருவாய்மொழி 5-6-1
ஸ்ருஷ்டியில் உபாதான, நிமித்த, ஸஹகாரி ஆகிய மூன்று காரணமும் பரமாத்மா

During the creation Bhgavan is all the three causes - Material, Operational and accessory cause.

3.9 *தத் த்வம் அஸி*
சாந்தோக்ய உபனிஷத்
த்வம் - **உனக்கு அந்தராத்மாவான பிரம்மமே**
தத் - **ஜகத் காரணமான ப்ரம்மமாய்**
அஸி - **ஆகிறாய்**
அந்தர் பஹிர் (உள்ளும் புறமும்)

The one who dwells inside you and the one who created all the universe is one and the same. (Macro and micro)

3.10 *விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின்* **முக்ய கருத்துக்கள்**
Major characteristics of **Vishishtadvatia philosophy-**

1. *வேதாந்தங்களைக் கொண்டு அறிய வேண்டிய தத்துவம் மூன்று - அவை சித், அசித், ஈச்வரன்.*
   a. *சித்* - **எம்பெருமானுக்கு ஸேஷனாய், அணு பரிமாணமாய், ஞானநந்தமாய், ஸ்வயம் ப்ரகாசமாய் பக்தர், முக்தர், நித்யர் என மூன்று வகை. பக்தர் மட்டுமே கர்ம வச்யமானவர்.**
   b. *அசித்* - **அறிவற்றதாய், பிறர் அனுபவிக்கவே உள்ளது. ப்ரகிருதி முதலாய் 24 தத்துவங்கள் (ப்ரகிருதி, மஹத்,**

அஹங்காரம், 5 பூதங்கள், 5 தன்மாத்ரைகள் 10 இந்திரியங்கள், 1 மனஸ்)

c. *ஈச்வரன்* விபுவாய், ஸர்வக்ஞனாய், ஸர்வ ஸேஷியாய், ஸர்வ சக்தியாய், ஸர்வ ஸ்வாமியாய், அநந்த கல்யாண குணாகரனாய், அகில ஹேய ப்ரத்யகனாய், ஸர்வ காரணனாய், பிராட்டியுடன் என்றும் சேர்ந்து இருப்பவன்.

Taatvas (Reality) are three which can be understood by Vedas. Chit (sentinet). Achit (nonsentient) and Eswaran (The Lord).

Chit is subservient to the Lord, atomic in nature, knowledgeable, blissful, self-glowing. Three types of chit. Eternals, liberated and earth-bound. Only the earthly bounded are dictated by karma

Achit has no knowlwdge. It is purpose of existance is for others to use it. Starting from prakrithi it amounts to 24 types. (Prakrithi, mahath, ahangaram, 5 intermediate stages, 5 gross elements, 10 organs and 1 mind)

Eswaran is pervasive. omniscient, Omnipotent, master for everything, full of energy, an ocean of great characters, and always with the consort of Maha Lakshmi.

2. *விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் ப்ரதான ப்ரதி தந்த்ரம் சாரீரக சாஸ்திரம்*. சேதனா சேதனங்களை பிரிக்க முடியாத சரீரமாக கொண்ட ப்ரம்மம், எம்பெருமான் ஒருவனே. அவன் *சரீரி, விசேஷ்யம்*. அவன் ஆதாரம், நியாந்தா, ஸேஷி. மற்றவை *சரீரம், விசேஷணம்*. அவை ஆதேயம், நியாமியம், ஸேஷன். இந்த விசேஷ்யமும், விசேஷணமும் சேர்ந்ததுதான் விசிஷ்டம்.

Visihtadvatia philosophy is based on Saareraka Saastram, body and soul relation. Bhagavan is the is the supreme spirit inside, sentient and nonsentient form the inseaprable body for Him. This is the main tenet of Visishtadvatia philosophy. He is the central core. He supports, controls and owns everything. All

others are limbs to Him. They are all being supported, controlled and serve Him. The accessories are inseparable embodiment of the core, the ultimate reality.

3. *எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே ஜகத் காரணகன். காரணமும் காரியமும் எம்பெருமானே.* சேதனா சேதனங்களை ப்ரளயத்தில், தன்னுள் சூஷ்மமாய் கொண்ட எம்பெருமான், ஸ்ருஷ்டியில் அவற்றை ஸ்தூலமாய் ஸங்கல்பிக்கிறான். இதற்கு *உபாதன, நிமித்த, ஸஹகாரி காரணம்,* அவன் ஒருவனே. மாறாத காரணமாய் இருப்பது சூஷ்ம சிதசித் விசிஷ்ட காரண ப்ரம்மம். அதன் சரீரமே காரியமாய் மாறுவது ஸ்தூல விசிஷ்ட காரிய ப்ரம்மம். இரண்டும் ஒன்று.

Lord Srimun Narayana is the sole cause for creation in the universe. During the dissolution all the sentient and nonsentient things take subtle form and stay within the Bhgavan. During creation they manifest. Bhagavan is the sole material cause, operational casue and accessory cause for all these. Bhagavan is both the cause and effect. Cause is constant. Effect is a variable. His athma is unchanging, but the body which constitutes the sentient and nonsentient things changes. When Bhgavan keeps the sentient and nonsentient entities within Himself in a subtle form, He is called the Casue Brammam. When Bhagavan is with the manifested sentient and nonsentient things, He is called Effect Brammam. Cause and Effect is the same.

4. *லக்ஷ்மியுடன் என்றும் கூடி இருக்கும் நாராயணன் ஒருவனே ஸ்வதந்த்ரன். அவன் பரத்வமாய், மோஷத்தை அளிப்பவனாய், அடியவர் அணுகவே தயையுடன் எளிமையாய் உள்ளான்.*

Bhagavan Narayanan is always with the consort of Lakshmi is the only one capable of granting moksham. Though He has the supremacy, He is extremely kind and easily accessible by His devotees.

5. *பகவானின் ரூபம் ஐந்து நிலைகளில் அடியவருக்கே இருக்கிறது.* பரம், வ்யூஹம், விபவம், ஹார்தம், அர்ச்சை என்று. இதிலும் சேதனர்கள் உகந்தது அர்ச்சையே.

Bhagavan resides in five different stages. To bless His devotees, He is in Param, Vyuham, Vibhavam, Haartham and Archai. Among these, archai stage is the most sought by Chetanas.

6. *பகவான் ஸகல கல்யாண குணாகரன். அகில ஹேய ப்ரத்யனீகன்.* ஸ்வரூப நிரூபக குணங்களையும், ஸ்வபாவ மங்கள குணங்களையும் உடையவன்.

Lord Narayana is an ocean of all the great qualities and void of any bad ones. He possesses characters uniquely identify Him as the Paramaatma and which are His innate nature. He also assumes several other great qualities on as needed basis.

7. *எம்பெருமானின் சொத்து லீலாவிபூதியும், நித்ய விபூதியும்.* விளையாட ப்ரகிருதி மண்டலம். நித்யமாய் இருக்க *ஸ்ரீ* வைகுண்டம் என இரண்டு.

Bhagavan owns both moksha and the prakrithi world. (two vibhuti). The playful world called prakrithi and constant world called Srivaikuntam.

8. *ஜீவனின் லக்ஷியம் மோக்ஷம்.* ஸம்ஸாரத்தை அறுத்து, *பரமபதம்* அடைந்து, பிராட்டி சகிதனான எம்பெருமானுக்கு நித்யமான கைங்கர்யம் செய்வதே *ஜீவனின் லக்ஷியம்*. அதுவே உயர்ந்த புருஷார்த்தம், அந்தமிலா பேரின்பம்.

The sole objective of any sentient thing is moksham. That is to be released out of the bondage of birth and death cycle, reach moksham and perform eternal service Lord Narayana and Lakshmi.

9. மோஷத்திற்கு உபாயம் பக்தி, ப்ரபத்தி என்ற இரண்டில் ஏதாவது ஒன்று மட்டுமே. அதிலும் எல்லாருக்கும் எளிதானது ப்ரபத்தியே. ஸ்ரீயப்பதியான நாரயணனே உபாயம், அவனே பலன்.

To reach moksham one needs to follow either Bhakthi or prapatti. Between those two, prapatti which can be followed by everyone. Bhgavan is the means and He is the ends..

10. பகவத் பக்தியின் எல்லை பாகவத கைங்கர்யம். பாகவதர்களில் சிறந்தவர் ஆசார்யர்கள். ஆசாரியர்கள் பகவானைக் காட்டிக் கொடுப்பதால் அவர்கள் பகவானைவிட உயர்ந்தவர்கள்.

The extreme case of service to Bhgavan is the performing service to his true devotees (Bhagavatha kaimkaryam). Acharyas are the cream of the bhagavathas. Since acharyas remove the ignorance of the chetanas and show them the Lord they are considered even higher than God Himself.

4 - ஜகத் காரணகன் ஸ்ரீமந் நாரயணனே
Srimun Narayana is the universal cause

4.1 உபனிஷத் கூறும் ஜகத்காரண வாக்யங்கள் ஸ்ரீமந் நாராயணனிடமே ஸமந்வயத்தை அடைகிறது. ஆக, மோஷத்தில் இச்சை உடையவன் பற்ற வேண்டியது சேதன அசேதனங்களை விட வேறான அவனையே என்றார் எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் முதல் அத்யாயத்தில்.

Sentences that describe the universal cause in Upanishads all refer only to Srimun Narayana. Bhgavad Ramanuja in the first ofchapter of SriBashyam explains that the anyone who aspires of moksham needs to pray to Him, who is differentiated from sentient and nonsentient things.

4.2 ப்ரஹ்ம ஞானத்திற்கு சாதன சதுஷ்டயம் தேவை. *நித்யாநித்ய விவேகம், பலனில் ஆசையின்மை, சமம், தமம் போன்ற மன ஒருநிலைப்பாடு, மோஷத்தில் இச்சை*. இவை கர்ம காண்டத்தை ஆராய்ந்த பின்னே தோன்றும்.

To acquire the knowledge on Brammam four essentials means are required. ஏ Discriminative knowledge on temporary and eternal things, Nondesirous of any effect, peace and tranqulity, yearning for moksha. These four will arise only after one understands the earlier chapters of veda called karma kanda.

4.3 *அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸா*
பிரம்ம சூத்திரம் 1
வேதத்தின் முற்பகுதியான கர்ம காண்டத்தை ஆராய்ந்து, அத்தால் வரும் பலன் எல்லாம் அல்பம், அஸ்திரம் எனத் தள்ளி, உயர்ந்த, நித்யமான ப்ரம்மத்தை அறிய இச்சை கொண்டோம்.

After gaining the knowledge on earlier portions of veda, one understands the rewards acquired through them are temporary and cheap. Thus he is desirous of understanding the eternal and superior brammam.

4.4 ப்ரம்மத்தின் அஸாதாரண லக்ஷணம் ஜகத் காரணத்வம். சித், அசித் பிரபஞ்சத்திற்கு காரணம் இல்லை.

- *ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம |*
  தஜ்ஜலாநிதி சாந்த உபாஸித
  சாந்தோக்ய உபனிஷத்
  இந்த பிரபஞ்சத்திற்கு காரணம் ப்ரம்மம் அல்லவோ?

  Brammam is the reason for the universe.

- *ஜன்மாதி அஸ்ய யத*:
  பிரம்ம சூத்திரம் 2
  இந்த ஜகத்திற்கு, ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் போன்றவை எதனிலிருந்து ஏற்படுகிறதோ அவை ப்ரம்மத்திற்கு லக்ஷணம்.

  From which all the creation, sustenance and dissolution of the universe happens, understand that one as the Brammam.

- *அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே*
  - ஸ்ரீபாஷ்யம் மங்கள ஸ்லோகம்
  ஸகல தேச, கால, நிலைகளில் சேதனா சேதனங்களை
- நித்ய, நைமித்ய, ப்ராகிருதம் என்னும் பல வகையாய் ஸ்ருஷ்டித்தும்
- அந்தர்யாமியாய், அவதாரமாய், பெற்றோராய் ஸ்திதி என்னும் ரக்ஷணம் செய்தும்,
- ஸம்ஹாரம் என்னும் லயம்
- இவற்றை எல்லாம் தனக்கு விளையாட்டாய் உடையவனே!

  Everything on this earth has been created, sustained and dissolved by the Bhgavan for his own pleasure.

4.5 *சாஸ்த்ரயோநித்வாத்*

- பிரம்ம சூத்திரம் 3

ப்ரம்மத்தை வேதாந்தத்தால் மட்டுமே அறிய முடியும். ப்ரத்யக்ஷம், அனுமானத்தால் அல்ல. அது *தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே* என்கிறபடி அருளிச் செயலுடன் சேர்ந்த உபய வேதாந்தம்.

Brammam can be understood only be vedanta and not by perceptive or inference knowledge. That vedanta includes both Sanskrit vedas and Tamil Divya prabhandham

4.6 **ப்ரம்மம் என்பது நாரயணன் ஒருவனே என ப்ரமாணங்கள் ஒரு முகமாய் நிருபிக்கின்றன.**

- *யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே |*
  யேந ஜாதாநி ஜீவந்தி யத் ப்ரயந்த்யபி ஸம்விஸந்தி |
  தத் விஞ்ஞானஸ்ய | தத் ப்ரம்ம |
  தைத்ரீய உபனிஷத்
  ஜீவன்கள் எதிலிருந்து உண்டாகி, வாழ்ந்து, மறைகிறதோ அதை அறிவாய். அது ப்ரம்மம். அது ஒன்றே

  From where all living things are created, sustained and finally ends understand that one as Brammam. That is only one.

- *ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்*
  ந: ப்ரம்மா நேசான:
  நேமே த்யாவா ப்ருத்வீ ந நக்ஷத்ராணி
  மஹாஉபனிஷத்
  ஸ்ருஷ்டிக்கு முன் நாராயணன் ஒருவனே இருந்தான். ப்ரம்மாவும் இல்லை. சிவனும் இல்லை. ஆகாசம், பூமி, நக்ஷத்திரம் எதுவும் இல்லை

  Before creation Lord Naryana was the only one existent. There was no Bramma, no Siva. There was no sky or sky.

- *ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாரும் இல்லா அன்று*
  நான்முகன் தன்னோடு தேவர் உலகோடு உயிர் படைத்தான்
  திருவாய்மொழி 4-10-1

ஒரு தேவனோ, உலகோ, ஜீவராசியோ இல்லாத ப்ரளய காலத்தில் பகவான் நான்முகனை, தேவர்களை, உலகங்களை, ஜீவராசிகளைப் படைத்தான்.

Before any devas, world, any living thing came to existance, Bhagavan created Bramma, devas ,world and all living things.

- *ஸத்$_3$ ஏவ ஸோம்ய ஏத$_3$ மக்$_3$ர ஆஸீத்$_3$*
  ஏகமேவாத் அத்$_3$விதீயம்
  சாந்தோக்ய உபனிஷத் 6-2-1
  "குழந்தாய் ஸ்வாதகேது, நாம, ரூபங்களுடன் உள்ள அந்த ப்ரம்மம் அவை இல்லாமல் தன்னையன்றி வேறு ஒன்றும் இல்லாமல் ஸத் ஆகவே இருந்தது".

  "Dear Svataketu, The brammam with name and shape today was the brammam without the name and shape and existed all alone without anything else. It is called "Sat".

- *நாராயணாத் ப்ரம்மா ஜாயதே*
  நாராயணாத் ருத்ரோ ஜாயதே
  நாராயணனிடமிருந்து ப்ரம்மா உண்டானான்
  நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டானான்

  From Narayana, Bramma was created. From Narayana, Siva was created.

- *நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும் தான்முகமாய் சங்கரனைத் தான் படைத்தான்*
  நான்முகன் திருவந்தாதி

  Four faced Bramma was created by Narayanan. Bramma, in turn, created Sankara.

- *சடையனை அயனையும் படைத்த இடையனை*

  The one in the middle (among the three Gods) created the other two - Siva and Bramma.

4.7 *தத்வ ஸமன்வயாத்*
- பிரம்ம சூத்திரம் 4

ஆனந்த ரூபமான ப்ரம்மத்தில் சாஸ்திரங்கள் அந்வயம் பெறுவதால், அந்த ப்ரமாணத்தால் உணர்த்தப்படுவது ப்ரம்மத்திற்கு பொருந்தும். அந்த ப்ரம்மத்தை உபாஸிப்பதால் அடையும் பலன் மோக்ஷம்.

Since all sastras finally related to Bhagavan, whatever those sastras tell are should be about Bhgavan. By doing bhakthi to that Brammam one is rewarded with moksham.

4.8 *ததைக்ஷத பஹு॰ ஸ்யாம் ப்ரஜாயேயேதி*
தத்தேஜோSஸ்ருஜத |
சாந்தோக்ய உபனிஷத் 6-2-3

அந்த பரபிரம்மம் "நானே பலவாக ஆகக்கடவேன்" என்று ஸங்கல்பித்தது. அதுவே தேஜஸ்ஸை ஸ்ருஷ்டித்தது.
அசேதனன் அறிவில்லாதலால் அதால் ஸங்கல்பிக்க முடியாது.

Since vedas claim that Brammam says that it wishes to be distributed from one to many things. Nonesentient things does not have this thinking capacity and that is why Brammam is not nonsentient.

4.9 ஸ்ருஷ்டிக்கு முன் ஸத்தான, ஆனந்தமான ப்ரம்மம் ஒன்றுதான் என்பதால் அது சேதனன் இல்லை. சேதனனுக்கு கர்மாவினால் ஆனந்தம் எப்போதும் இல்லை.

Before all the creation, there was in essence a blissful Brammman alone was existent. Since it was always blissful it can't be chetana. Chetana is associated with karma and that is why he is not always happy.

4.10 *ஸ்ரஷ்டா, தேஹி, ஸ்வநிஷ்டா, நிரவதிக மஹிமா*
ஸ்வாமி தேசிகன், அதிகரண ஸாராவளி

- *ஸ்ரஷ்டா* = ஸ்ருஷ்டிக்கிறவன்

- *தேஹி* = அவன் ஆத்மா, மற்றவை சரீரம்
- *ஸ்வநிஷ்டா* = பகவானுக்கு ஆதாரம் அவனே
